ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020 ஓகத்து 17 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 யூலை

தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2020 யூனுடன் ஒப்பிடுகையில் பொருளாதார நடவடிக்கை இயல்புநிலையடைவதிலிருந்து நன்மையடைந்து 2020 யூலையில் தொடர்ந்தும் விரிவடைந்தன.


**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**64.6**

**2020 யூனுடன் ஒப்பிடுகையில் 2.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

**வியாபார நடவடிக்கைகளின் இயல்புநிலை மூலம் தயாரிப்பு நடவடிக்கைகள் படிப்படியாக கொவிட் நோய்த்தொற்றிற்கு முந்திய மட்டங்களை நோக்கிச் செல்வதனைப் பிரதிபலித்து, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2020 யூலையில் 64.6இனைப் பதிவுசெய்து தொடர்ந்தும் விரிவடைந்தது.** இதற்கு புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களின் விரிவடைதலே முக்கிய காரணங்களாக அமைந்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களும் 2020 யூலையில் கிடைக்கப்பெற்ற புதிய கட்டளைகளிலிருந்து நன்மையடைந்து மெதுவான வீதத்தில் விரிவடைந்தன. அதேவேளை, இவ் அபிவிருத்திகளுக்கிசைவாக தொழில்நிலை விரிவடைந்து காணப்பட்டது.

பொருளாதார நடவடிக்கைகளின் இயல்புநிலை மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற உயர்வான கேள்வியினால் எதிர்கால உற்பத்திகளுக்காக உத்தேசிக்கப்பட்ட இருப்புகளின் திரட்டுதல் காரணமாக கொள்வனவுகளின் இருப்பானது உயர்வான வேகத்தில் விரிவடைந்தது. நிரம்பலர் விநியோக நேரம், காலப்பகுதியின் போது மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **67.3** | **64.6** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 73.7 | 69.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 77.4 | 73.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.6 | 51.6 | = | அதிகரிக்கின்றது, சமமான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 61.1 | 61.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோக நேரம் | 63.2 | 58.9 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பிட்ட வகையான பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் சில தயாரிப்பு நடவடிக்கைகளை மோசமாகப் பாதித்தன என பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர்.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக மந்தமடைந்த வெளிநாட்டுக் கேள்வி தமது வியாபார நடவடிக்கைகள் மீது தொடர்ந்தும் அழுத்தத்தினை நெருக்கும் என்ற கரிசனையினை தயாரிப்பாளர்கள் இன்னும் கொண்டிருந்த போதிலும் அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் மேம்பட்டன.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 யூனிலிருந்து 2.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 யூலையில் 50.3 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

கொவிட் - 19இன் மோசமான தாக்கத்தின் மூலம் 2020 யூலையில் ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு உயர்ந்த வீதத்தில் விரிவடைந்த அதேவேளை ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு சுருக்கமடைந்து காணப்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], 2020 ஓகத்து 17 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**2020 யூலையில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 51.4 இனை அடைந்ததன் மூலம் பணிகள் துறை தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக தொடர்ந்தும் விரிவடைந்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த பணிகள் துறையில் மேலதிக மீட்சியினை எடுத்துக்காட்டி 2020 யூனுடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் மூலம் இது துணையளிக்கப்பட்டிருந்தது.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதித் துணைத் துறைகளிலுள்ளவை பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான மீட்சியுடன் 2020 யூலையில் மேம்பட்டன.

மாதகாலப்பகுதியின் போது பணிகள் நடவடிக்கைகளில் பரந்த அடிப்படையிலான மீட்சியினை எடுத்துக்காட்டி அநேகமான துணைத் துறைகளின் வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. வழங்கப்பட்ட நிதியியல் வசதிகளின் அதிகரிப்பின் மூலம் நிதியியல் பணிகள் துணைத் துறையிலுள்ள வியாபார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூலையில் மேம்பட்டன. மேலும், தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறையும் உள்நாட்டு சுற்றுலாவின் மேம்பாடுகளுக்கு இசைவாக கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், சுகாதாரப் பணிகள் மற்றும் தொலைத்தொடர்பு துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் அதிகரித்தன. எவ்வாறாயினும், குறிப்பாக கப்பற்சரக்குக் கையாளுதல் மற்றும் இறக்குமதி வர்த்தகங்களில் காணப்படும் பதிலிறுப்பாளர்கள் அத்தியாவசியமற்ற பொருட்கள் மீது விதிக்கப்பட்ட தடைகள் பற்றிய கரிசனையை தெரிவித்தனர்.

தொழில்நிலையானது புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக தொடர்ச்சியாக ஆறாவது மாதமாக 2020 யூலையில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

மேலும், அநேகமான நிறுவனங்கள் வழமையான பணியாற்றுச் சூழலில் இயங்குவதனால் 2020 யூலையில் நிலுவையிலுள்ள பணிகள் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **50.4** | **51.4** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 53.6 | 53.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 54.5 | 61.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 34.7 | 40.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.4 | 36.8 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 60.7 | 65.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, எதிர்வரும் காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் புத்துயிர் பெறும் என்கின்ற சாதகமான எண்ணப்பாங்குடன் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள் 2020 யூலையில் அதிகரித்தன.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**51.4**

**2020 யூனுடன் ஒப்பிடுகையில் 1.0 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2020 யூனில் 48.0 இலிருந்து 2020 யூலையில் 50.5 இற்கு அதிகரித்து, 2020 சனவரி தொடக்கம் முதற்தடவையாக உலகளாவிய பணி நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றினை சமிஞ்சைப்படுத்துகின்றது.

சீனா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூலையில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் சுட்டெண்கள் சரிவடைதலொன்றினை எடுத்துக்காட்டின. ஐக்கிய அமெரிக்காவின் பணிகள் கொ.மு.சுட்டெண் 50.0 கொண்ட நடுநிலையினைப் பதிவுசெய்தது.

*(மூலம்: மார்க்கிட்[1], ஓகத்து 17, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.